### "இல்லாதவர்களுக்கு உதவி செய்திடுவீர் !" என்ற

# மகாவீரரின் போதனைகளை நெஞ்சில் நிறுத்திடுவோம்!

## மகாவீர் ஜெயந்தியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஏப். 11 -**

**இல்லாதவர்களுக்கு உதவி செய்திடுவீர் என்ற மகாவீரரின் போதனைகளை நெஞ்சில் நிறுத்திடுவீர் என்று மகாவீரர் ஜெயந்தியையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகாவீரர் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

இந்தியத் துணைக் கண்டத்தில் நிலை பெற்றுள்ள பழம்பெரும் சமயங்களில் ஒன்று ஜைனம் என்னும் சமண சமயம். சமண சமயத்தின் 24ஆவது மற்றும் இறுதித் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் பிறந்த நன்னாளில் அவர்களுடைய கொள்கைகளைப் பின்பற்றித் தமிழ்நாட்டில் வாழ்ந்துவரும் சமண சமய மக்கள் அனைவருக்கும் மகாவீரர் ஜெயந்தி நல்வாழ்த்துகளை கூறி மகிழ்கிறேன்.

அரச குடும்பத்தில் பிறந்தவர் மகாவீரர். ஆயினும் அரச குடும்பச் செல்வச் செழிப்பை வெறுத்தவர். ஏழை, எளியோரின் வாழ்க்கைச் சூழ்நிலைகளை உணர்ந்து அவர்கள் மேம்பாட்டிற்காகச் சிந்தித்தவர். உண்மை, அகிம்சை, உயிர்களிடத்து இரக்கம், கொல்லாமை முதலான உயரிய கொள்கைகளை உலகுக்குப் போதித்தவர்.

அறச்சிந்தனைகளை விதைத்து வளர்த்த வர்த்தமான மகாவீரர் பிறந்த நாளைத் தமிழ்நாட்டில் வாழும் சமண சமய மக்கள் சிறப்பாகக் கொண்டாடி மகிழும் வகையில் மகாவீரர் ஜெயந்தி திருநாளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு அரசு சார்பில் முதன்முதலில் அரசு விடுமுறை வழங்கினார்கள்.

சமண சமயச் சான்றோர்கள் தமிழ் மொழியில் பல்வேறு இலக்கிய, இலக்கண நூல்களை இயற்றி தமிழ்மொழி வளர்ச்சிக்கும் அதன் செழுமைக்கும் சிறந்த முறையில் பங்களித்துள்ளார்கள் என்பது பெருமைக்குரிய செய்தி.

உயிர்களிடத்து அன்பு செலுத்தி, இல்லாதவர்களுக்கு உதவிகள் செய்து வாழவேண்டும் என்னும் மகாவீரரின் போதனைகளை நெஞ்சில் நிறுத்தி மகாவீரர் ஜெயந்தியினைக் கொண்டாடும் சமண சமய மக்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை மீண்டும் கூறி மகிழ்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### ஏழை – நடுத்தர மக்களின் நலனுக்காக

# 'வந்தே பாரத்' ரயில்களில் கட்டணம் குறைக்கப்படுமா?

## மாநிலங்களவையில் – வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஏப். 11 -

ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனுக்காக வந்தே பாரத் ரயில்களில் கட்டணம்குறைக்கப்படுமா என கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காத ரயில்வே அமைச்சர், அது இந்திய ரயில்வேயின் செயல்முறை என பதிலளித்துள்ளார்.

வந்தே பாரத் ரயில் கட்டணக் குறைப்பு மற்றும் புதிதாக வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்துவது இந்திய ரயில்வேயின் தொடர் செயல்முறை என, தி.மு.க. எம்.பி. இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.



தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட மெட்ரோ நகரங்களில் வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதா என தி.மு.க. எம்.பி. இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு, அது இந்திய ரயில்வேயின் தொடர் செயல்முறை என ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட மெட்ரோ நகரங்களில் வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதா? தற்போது நாடு முழுவதும் எத்தனை வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன? ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனுக்காக வந்தே பாரத் ரயில்களில் பயணக் கட்டணத்தை குறைக்கும் திட்டம் உள்ளதா?

இவற்றிற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்துள்ள பதிலில், மாநில எல்லைகளை தாண்டிய ரயில்வே வலையமைப்பில், இந்தியா ரயில்வேயால் நாடு முழுவதும் தற்போது 136 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன என்றும், அதில் தமிழ்நாட்டில் மட்டும் 16 வந்தே பாரத் ரயில்கள் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருதாக குறிப்பிட்டுள்ளார்.

புறநகர் மற்றும் பிராந்திய பயணிகளின் பயண அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் "நமோ பாரத் ரேபிட் ரயில்" எனப்படும் "வந்தே மெட்ரோ" சேவையை இந்திய ரயில்வே (IR) அறிமுகப்படுத்தியுள்ளதாகவும், அதன்படி 2 நமோ பாரத் ரேபிட் ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன என்றும் பதில் அளித்துள்ளார். புதிதாக வந்தே மெட்ரோ சேவைகள் உட்பட புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துவது இந்திய ரயில்வே துறையில் ஒரு தொடர் செயல்முறையாகும் என்றும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

---

# கூட்டாட்சிக் கோட்பாடுகளை வலுப்படுத்தும் தீர்ப்பு!

## மார்க்சிய கம்யூ. அரசியல் தலைமைக்குழு வரவேற்பு

சென்னை, ஏப். 11 -

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், கூட்டாட்சி கோட்பாட்டை வலுப்படுத்தும் தீர்ப்பு என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. "தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் மறுத்த ஆளுநரின் முடிவை ரத்து செய்த உச்ச நீதிமன்றத்தின் முக்கியமான தீர்ப்பை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அரசியல் தலைமைக் குழு வரவேற்கிறது. ஆளுநரால் நிறுத்தி வைக்கப்பட்ட பத்து மசோதாக்களும் இப்போது சட்டமாகும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. உச்சநீதிமன்றம், ஆளுநரின் செயல்களை 'சட்ட விரோதமானவை மற்றும் தன்னிச்சையானவை' என்று குறிப்பிட்டுள்ளது. சட்டமன்றத்தால் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர், ஆளுநர் எவ்வளவு காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான கால அட்டவணையை நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது. அனைத்து மாநிலங்களுக்கும் இந்த தீர்ப்பு பயனளிக்கும் அரசியலமைப்பில் உள்ள கூட்டாட்சி கோட்பாடுகளை மீறிச் செயல்படும் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களின் பல ஆளுநர்களின் செயல்களுக்கு எதிராக இந்த தீர்ப்பு வந்துள்ளதால், இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பாகும். மாநில சட்டமன்றங்களால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் மறுத்துள்ள கேரளம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் இந்த தீர்ப்பு முன்னுதாரணமாக அமையும். நமது அரசியலமைப்பில் உள்ள கூட்டாட்சி கோட்பாடுகளை வலுப்படுத்தும் இந்த தீர்ப்பை சிபிஐ (எம்) வரவேற்கிறது. அதிகாரத்துவத்திற்கு எதிரான போராட்டத்தையும், மாநில அரசு களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தையும் உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு வலுப்படுத்தும்".

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### ஆண்டிப்பட்டி பகுதியில்

# போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த புறவழிச் சாலை அமைக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் – மகாராஜன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

தேனி, ஏப். 11-

ஆண்டிபட்டி நகர் பகுதியில் தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து உள்ளதால் அதனை கட்டுப்படுத்த புறவழிச்சாலை அமைக்க வேண்டும் என்று சட்டமன்ற கூட்டத்தொடரில் ஆண்டிபட்டி எம்.எல்.ஏ. மகாராஜன் கோரிக்கை வைத்து பேசினார்.

தமிழ்நாடு சட்டப் பேரவை கூட்டத்தொடரில் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் பேசுகையில்,



தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி நகர் பகுதி மதுரை கொச்சின், எர்ணாகுளம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மதுரை, ராஜபாளையம், திருநெல்வேலி, கன்னியா குமரி மற்றும் கம்பம், போடி, கேரளா மாநிலத்தில் உள்ள மூணாறு எர்ணாகுளம், கொச்சின் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்கள் இந்த ஆண்டிபட்டி நகர் பகுதி வழியாகத்தான் சென்று வருகிறது. ஆண்டிப்பட்டி நகரில் சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

ஆண்டிப்பட்டி நகரில் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சாலை மிகவும் போக்குவரத்து நெரிசலுடன் காணப்படுகிறது. இந்த சாலை வழியாக சுமார் 10க்கும் மேற்பட்ட தனியார் மண்டபங்கள், பள்ளிகள், வங்கிகள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவை அமைந்துள்ளது. முகூர்த்த காலங்களில் ஆண்டிபட்டி நகர் பகுதியில் உள்ள சாலை மிகுந்த போக்குவரத்து நெரிசலுடன் காணப்படுகிறது.

இதனால் தொடர்ந்து விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் உருவாகியுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளிகள், அலுவலகங்கள் மற்றும் வேலைகளுக்கு சென்று வருபவர் என பலரும் ஆண்டிபட்டி நகர் வழியே பயன்படுத்துவதால் அதிகளவு போக்குவரத்து நெரிசல் உள்ளது. இந்த போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு ஆண்டிபட்டி பகுதியில் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததுடன் இந்த புறவழிச் சாலை திட்டம் எப்போது தொடங்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் எம்.எல்.ஏ. மகாராஜன் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியபோது, புறவழிச் சாலை அமைப்பது தொடர்பாக எம்.எல்.ஏ. மகாராஜன் விளக்கமாக கடிதம் அளித்தால் வருங்காலத்தில் ஆண்டிபட்டி புறவழிச்சாலை அமைப்பது குறித்து முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி விளையாட்டுப் போட்டிகள்!

# சேலம் மத்திய மாவட்டத்தில் 46 ஆயிரம் பேருக்கு பரிசுகள் - நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி – பேச்சு!

சேலம், ஏப். 11-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, சேலம் மத்திய மாவட்டம் தெற்கு, மேற்கு, வடக்கு ற்றும் ஓமலூர் தொகுதியில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற 46 ஆயிரத்து 80 பேருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் பரிசுகள் நலஉதவிகள் வழங்கினார்.



அதன் விவரம் வருமாறு: -

**தெற்கு தொகுதி**

கழக தலைவர் முதல்வரின் 72 வது பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்டம் தெற்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட 17,463 பேருக்கு கழக மாவட்ட செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் பரிசுகளை வழங்கினார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரின் 72 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தெற்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கிரிக்கெட், குத்துச்சண்டை, இறகு பந்து, கூடைப்பந்து, சிலம்பம், கராத்தே ஒட்டபந்தயம் என பல்வேறு போட்டிகள் ஆண்கள், பெண்கள் என தனித் தனியாக நடத்தப்பட்டன.

இந்த போட்டிகளில் தெற்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் சேலம் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பிடித்த தலா 225 ஆண்களுக்கும், தலா 684 பெண்களுக்கும் பரிசுகளை வழங்கினார். இது தவிர போட்டிகளில் பங்கேற்ற ஆண்கள், பெண்கள் சுமார் 16 ஆயிரத்து 554க்கும் மேற்பட்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளையும் கழக மாவட்ட செயலாளர் அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட அவைத் தலைவர் சுபாசு, பொருளாளர் கார்த்திகேயன், தொகுதி பாரவையாளர்கள் பார் இளங்கோவன், சுகவனம், சேலம் மாநகர செயலாளர் ரகுபதி, உள்பட தலைமைச் செயற்குழு மற்றும் பொது குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

**மேற்கு தொகுதி**

கழக தலைவர் முதல்வரின் 72வது பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்டம் மேற்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட 7,958 பேருக்கு கழக மாவட்ட செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் பரிசுகளை வழங்கினார்.

கழகத் தலைவர் - முதலமைச்சரின் 72ஆவது பிறந்தநாள் முன்னிட்டு சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மேற்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்நடத்தப்பட்டன.

கிரிக்கெட், குத்துச்சண்டை, இறகு பந்து, கூடைப்பந்து, சிலம்பம், கராத்தேஒட்டபந்தயம் என பல்வேறு போட்டிகள் ஆண்கள், பெண்கள் என தனித் தனியாக நடத்தப்பட்டன.

இந்த போட்டிகளில் மேற்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள சுமார் 7ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் சேலம் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆர்.இராஜேந்திரன் கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பிடித்த தலா 749 ஆண்களுக்கும், தலா 353பெண்களுக்கும் பரிசுகளை வழங்கினார். இது தவிர போட்டிகளில் பங்கேற்ற ஆண்கள், பெண்கள் சுமார் 6ஆயிரத்து 856க்கும் மேற்பட்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளையும் கழக மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆர். இராஜேந்திரன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட அவை தலைவர் சுபாசு, பொருளாளர் கார்த்திகேயன், தொகுதி பாரவையாளர்கள் பார் இளங்கோவன், சுகவனம், சேலம் மாநகர செயலாளர் ரகுபதி, உள்பட தலைமைச் செயற்குழு மற்றும் பொது குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், ஒன்றிய கிளைக் கழக செயலாளர்க்ள என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

**வடக்கு தொகுதி**

கழக தலைவர் முதல்வரின் 72வது பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்டம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட 10,431 பேருக்கு கழக மாவட்ட செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் பரிசுகளை வழங்கினார்

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரின் 72ஆவது பிறந்தநாள் முன்னிட்டு சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட வடக்குசட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும், பேரூர் வார்டுகளிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்நடத்தப்பட்டன.

கிரிக்கெட், குத்துச்சண்டை, இறகு பந்து, கூடைப்பந்து, சிலம்பம், கராத்தே ஒட்டபந்தயம் என பல்வேறு போட்டிகள் ஆண்கள், பெண்கள் என தனித் தனியாக நடத்தப்பட்டன.

இந்த போட்டிகளில்வடக்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள சுமார் 10ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் சேலம் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆர்.இராஜேந்திரன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பிடித்த தலா 710 ஆண்களுக்கும், தலா 675 பெண்களுக்கும் பரிசுகளை வழங்கினார். இது தவிர போட்டிகளில் பங்கேற்ற ஆண்கள், பெண்கள் சுமார் 9ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளையும் கழக மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆர். இராஜேந்திரன்வழங்கினார்.

நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட அவை தலைவர் சுபாசு, பொருளாளர் கார்த்திகேயன், தொகுதி பாரவையாளர்கள் பார் இளங்கோவன், சுகவனம், சேலம் மாநகரச் செயலாளர் ரகுபதி, உள்பட தலைமைச் செயற்குழு மற்றும் பொது குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

**ஓமலூர் தொகுதி**

கழக தலைவர் முதல்வரின் 72வது பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட 10,228 பேருக்கு கழக மாவட்ட செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் பரிசுகளை வழங்கினார்

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரின் 72ஆவது பிறந்தநாள் முன்னிட்டு சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்நடத்தப்பட்டன.

கிரிக்கெட், குத்துச்சண்டை, இறகு பந்து, கூடைப்பந்து, சிலம்பம், கராத்தேஒட்டபந்தயம் என பல்வேறு போட்டிகள் ஆண்கள், பெண்கள் என தனித் தனியாக நடத்தப்பட்டன.

இந்த போட்டிகளில்ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள சுமார் 10ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் சேலம் மத்திய மாவட்டச் செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆர்.இராஜேந்திரன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பிடித்த தலா 1443 ஆண்களுக்கும், தலா 345பெண்களுக்கும் பரிசுகளை வழங்கினார். இது தவிர போட்டிகளில் பங்கேற்ற ஆண்கள், பெண்கள் சுமார் 8ஆயிரத்து 450க்கும் மேற்பட்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளையும் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட அவை தலைவர் சுபாசு, பொருளாளர் கார்த்திகேயன், தொகுதி பாரவையாளர்கள் பார் இளங்கோவன், சுகவனம், சேலம் மாநகர செயலாளர் ரகுபதி, உள்பட தலைமை செயற்குழு மற்றும் பொது குழு உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் பேரூர் வார்டு செயலாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

---

# பொம்மையின் கிரீடம் வீழ்ந்தது!

ஆளுநரா...
அதிகாரவர்க்கம்
ஆட்டி வைக்கும் ஆட்டுநரா...

திட்டங்களைப் பூட்டிவைக்கும்
ஆணவம்....
அடிபணியுமா திராவிடம்?...

சட்டப்போராட்டம் நடத்தி
நல்ல தீர்ப்பு கிடைத்தது...
உயர்கல்வி வளர
வாய்ப்பு கிடைத்தது....
பொம்மையின் கிரீடம்
வீழ்ந்தது...
உண்மைக்கு ஒளி கிடைத்தது ...

ராஜ்பவனில் ராஜ வாழ்க்கை
வாழலாம்...
ராஜாங்கம் நடத்தமுடியுமா....
ஆட்டுக்கும் அதன் தாடிக்கும்
அடி மேல் அடி....

முதல்வர்களில் முதல்வர்
கலைஞர் புதல்வரின்
போராட்ட குணம் வென்றது..
மக்கள் மனதில் நின்றது....
மாநில சுயாட்சிக்கு
மலர்மாலை தந்தது.....

தத்திச் செல்லும் குழந்தை
என்றா
நினைத்தீர்கள்?
தயங்காமல் செயலாற்றும்
திராவிட மாடல் அரசு...
மலை மலையாகத் தடைகள்
தந்தாலும்
அலை அலையாக ஆர்ப்பரித்து
அகற்றும் ஆற்றல் உண்டு..

உள்ளூர் வேடதாரிகள்
கூட்டணி கொண்டு
எதிர்த்தாலும்
உயர்ந்த தமிழ்நாடு
ஒன்றே குறிக்கோள்
என்று ஓங்கிச் சொல்கிறார்
தலைவர் தளபதி.

தேரோடும் ஊரில் பிறந்து
போராடும் குணம் கொண்ட
கொள்கை சீலர் அல்லவா

அடங்கிப் போகும்
முடங்கிப் போகும் சாமிகள்
அல்ல .....
அதிரடி செயல்வீரம்
கொண்ட அடலேறுகள்...
மக்கள் நலன் விரும்பும்
மதியூகிகள்....

வெல்க திராவிடம்
வாழ்க தலைவர்!



**எஸ்.எச்.ரஹ்மத்துல்லா**
அமைப்பாளர் – சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. பழனியப்பன்
### ஏப்ரல் 11 (1979)



திராவிட கழகத்தில் உறுப்பினராகி, கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, வளவனூர் குமாரக்குப்பம் பேரூர்க் கழக செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக 1953ல் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில், கல்லக்குடி ரயில் நிறுத்தும் போராட்டத்தில் பங்கேற்று, கைது செய்யப்பட்டு, ஆறுமாதம் சிறைத் தண்டனை பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.